# சிமெண்ட்டின் வகைகளும் அவற்றின் பயன்பாடுகளும்

## ராம்கோ சூப்பர் ஸ்டீல் சிமெண்ட் (போர்ட்லேண்ட் சிலாக் சிமெண்ட்)

இரும்பு தொழிற்சாலைகளில் இருந்து பெறப்படும் சிலாக் (SLAG) எனும் பொருளை சேர்த்து தயாரிக்கப்படும் 'ராம்கோ சூப்பர் ஸ்டீல் சிமெண்ட்' சிறப்புத் தன்மைகள் வாய்ந்தது. குளோரைட் மற்றும் சல்பேட் தாக்குதலில் இருந்து கான்கிரீட்டை பாதுகாக்கும் தன்மை வாய்ந்த இந்த சிமெண்ட், கடலில் கட்டப்படும் கட்டுமானங்கள், கடல் சார்ந்த பகுதியில் கட்டப்படும் கட்டுமானங்கள் ஆகியவற்றிற்கு மிகவும் பொருத்தமான சிமெண்ட்டாக திகழ்கிறது.

## சல்பேட் ரெசிஸ்டிங் போர்ட்லேண்ட் சிமெண்ட்:

கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானங்கள், இரசாயன தொழிற்சாலை கட்டுமானங்கள், நிலத்தடியில் சல்பேட் உப்பு அதிகம் இருக்கக்கூடிய இடங்களில் உள்ள நிலத்திற்கு கீழ் கட்டப்படும் கட்டுமானங்கள் போன்றவற்றில் பயன்படுகிறது.

குளோரைட் தாக்குதலில் இருந்து இரும்புக் கம்பிகளை பாதுகாக்கும் தன்மை இந்த சிமெண்ட்டுக்கு இல்லை என்பதால், நிலத்திலோ, நிலத்தடி நீரிலோ குளோரைட் கலந்திருக்கும் இடங்களில் இந்த சிமெண்ட்டை பயன்படுத்துவது நல்லதல்ல.

## ராபிட் ஹார்டனிங் போர்ட்லேண்ட் சிமெண்ட் (ராம்கோ சூப்பர் ஃபாஸ்ட்):

அதி விரைவாக சீர் செய்யவேண்டிய பழுதுகள், விமான ஓடுதளங்களில் ஏற்படும் சேதங்கள் போன்றவற்றை சீர் செய்வதற்கும், அவசர கால கட்டுமானங்களுக்கும் ராபிட் ஹார்டனிங் போர்ட்லேண்ட் சிமெண்ட் பயன்படுகிறது.

இந்தியாவில் முதன் முறையாக, நுகர்வோரின் தேவையை கருத்தில்கொண்டு, ஹாலோ பிளாக் மற்றும் பேவர் பிளாக் தயாரிக்கப் பயன்படும் வகையில், ராபிட் ஹார்டனிங் போர்ட்லேண்ட் சிமெண்ட்டை 'ராம்கோ சூப்பர் ஃபாஸ்ட்' என்ற பெயரில் தி ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் தயாரித்து சந்தையில் விற்பனை செய்கிறது.

விரைவாக கடினமாகி அதிக வலுவை விரைவில் அடையக்கூடிய தன்மை வாய்ந்த இந்த சிமெண்ட், ஹாலோ பிளாக் மற்றும் பேவர் பிளாக் தயாரிப்பவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது.





தொடரும்